2013 ஏப்ரல் 16]

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நீரின்றி அமையாது உலகு' என்னும் வள்ளுவரின் வாக்கிற்கிணங்க, அந்த அணையின் முக்கியத்துவத்தைக் கருதி அப்பகுதி மக்களுடைய கோரிக்கையை ஏற்று, பரிசீலிக்கப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் எனது நன்றியினைக் காணிக்கை ஆக்குகிறேன். அதே பகுதியில், புரவிபாளையத்திற்கு அருகில் உள்ள சுங்கப்பாறை அணையும் பழுதுபட்டுக் கிடக்கின்றது. அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சரிசெய்து கொடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி அவர்கள்.*

திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி: *உலகில் வேறு எங்கும் இல்லாத, அளப்பரிய திட்டங்களை வழங்கி, உலகிற்கு எடுத்துக்காட்டாக விளங்கும் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியினைக் காணிக்கை ஆக்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 235, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

235—

பதிவுக் கட்டணம்

***7630—திரு. அ. சவுந்தரராசன்:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊரகப் பகுதிகளில் ரூ.1,000/— மற்றும் அதற்கு மேலுள்ள பதிவுக் கட்டணம் மற்றும் முத்திரைத் தீர்வையை வரைவு காசோலைமூலம் செலுத்தும் முறையை நீக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) ஊரகப் பகுதிகளில் பதிவுக் கட்டணம் மற்றும் முத்திரைத் தீர்வை ரூ.1,000/— மற்றும் அதற்கு மேற்பட்டு இருந்தால் வரைவு காசோலைமூலம் செலுத்தும் முறையை நீக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எனவே இவ்வினா எழவில்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முத்திரைத் தீர்வையையும் பதிவுக் கட்டணத்தையும், அதேபோல் VAT தொகையையும் வர்த்தகர்கள் கட்டுவதற்கு வரைவுக் காசோலை (Demand Draft) வழியாகச் செலுத்த வேண்டுமென்கிற முறை கடுமையான சிரமத்தை அவர்களுக்கு உண்டாக்கிக் கொண்டிருக்கிறது. கிராமப்புறங்களில், அதிலும் குறிப்பாக ரூ.1,000/—, ரூ.1,500/—, ரூ.2,000/— என்று இருந்தால்கூட அவர்கள் வரைவு காசோலைமூலம் கட்டணத்தைச் செலுத்த வேண்டுமென்று சொல்வதில் பெரும் பிரச்சினை உள்ளது. ஒன்று கமிஷன் போகிறது. இரண்டாவதாக, வங்கிகளில் உடனே அது கிடைப்பதுமில்லை. அங்கே ஆள் பற்றாக்குறை உள்ளது. நாளை வாருங்கள், காலையில் வாருங்கள், மாலையில் வாருங்கள் என்று நிறைய பேர் அலைக்கழிக்கப்படுவது பெரும் பிரச்சினையாக இருக்கிறது. இந்த முறையைக் கொண்டுவருவதை நான் தவறு என்று சொல்லவில்லை. அதைப் படிப்படியாக, பையப் பையக் கொண்டு வரவேண்டும். இப்போது, ரூ.1,000—க்குக் கீழே இருப்பதை*

2013 ஏப்ரல் 16]

நாம் பணமாகத்தான் வாங்குகிறோம். ஆகவே, இந்த ரூ.1,000/- என்பதை குறைந்தபட்சம் ரூ.5000/-க்குமேல் என்று அதை சற்று விரிவுபடுத்தி, ரூ.5,000/- வரை என்று சொன்னால் சிறு வர்த்தகர்களுக்கு அல்லது சிறு அளவிலே இருப்பவர்களுக்கு அது பயனளிக்கும். அதனால் அவர்களுக்கு நன்மை விளையும் என்று நான் வலியுறுத்துகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைச் செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதிவு செய்யப்பட வேண்டிய ஆவணத்துக்குரிய முத்திரைத்தாளில் ஆவணம் எழுதப்படாமல் இருந்தால் குறைவு ஏற்படும் முத்திரைத் தீர்வை இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 41—ன்கீழ் ரொக்கமாக வசூலிக்கப்பட்டு வந்தது. அவ்வாறு ரொக்கமாக வசூலிக்கப்படும் தொகை அதிகமாக இருக்கும்பட்சத்தில், வசூலித்தல் மற்றும் வங்கியில் செலுத்துதல் போன்ற இடர்ப்பாடுகள் நடைமுறையில் காணப்படுவதால் இதனைத் தவிர்க்கும் நோக்கத்துடன் மேற்படி தொகையை வங்கி வரைவோலையின் மூலமாக வசூலித்திட அரசாணை (நிலை) எண் 146, வணிக வரித் துறையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தத் தொகையின் உச்ச வரம்பை ரூ.1,000/—லிருந்து ரூ.5,000/— ஆக உயர்த்த வேண்டுமென்று கோரிக்கை விடுத்துள்ளார்கள். துறை அதை ஆய்வு செய்து, நிச்சயமாகத் தேவை இருப்பின் அதற்கு ஏற்றாற்போல் நடவடிக்கை எடுக்கும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 236, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மனோரஞ்சிதம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*